செ.வெ.எண்.50 நாள்: 25.04.2020

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட 3 நபர்கள் குணம் அடைந்து வீடு திரும்பினர்.

---

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுக்க இந்தியா முழுவதும் சுய ஊரடங்கு உத்தரவினை மே 3ம் தேதி வரை நீடித்து உத்தரவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழகம் முழுவதும் சுய ஊரடங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்திலும் சுய ஊரடங்கு தீவிரப்படுத்தப்பட்டு கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் 27 நபர்கள் பாதிக்கப்பட்டு அதில் 22 நபர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், 5 நபர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வந்தனர். கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 17 நபர்களும், திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 2 நபர்களும் குணம் அடைந்து ஏற்கனவே வீடு திரும்பியுள்ளனர். ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணம் அடைந்து போல்டன்புரத்தை சேர்ந்த 2 நபர்களும், திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணம் அடைந்து அய்யனாரூத்து பகுதியை சேர்ந்த ஒரு நபரும் இன்று (25.04.2020) வீடு திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு தொடர்ந்து 14 நாட்கள் மருத்துவ கண்காணிப்பில் இருப்பார்கள். தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவமனை முதல்வர் மரு.திருவாசகமணி அவர்களும், திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவமனை முதல்வர் மரு.ரவிசந்திரன் அவர்களும் குணம் அடைந்தவர்களுக்கு பழங்கள் வழங்கி வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த 3 நபர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒருவரும் என இன்னும் 4 நபர்கள் மட்டும் கொரேனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி, திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி